# மக்கள் மறு வாழ்வு

மக்கள்
மறு வாழ்வு
சந்தா விபரம்
தனிப்பிரதி 75 காசுகள்
வருட சந்தா/ரூபா 10-00
விபரங்களுக்கு :
மக்கள் மறுவாழ்வு
சென்னை - 600 094.

மலர் 3] ஆடி - ஜுலை 1985 [இதழ்: 10


## நாடற்றவர்களாக இருக்கும் 93,000 தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கும்

# வாக்குறுதியைக் காப்பாற்ற இந்தியா வற்புறுத்தவேண்டும்!

''இலங்கை அரசாங்கம் வாக்களித்தபடி - ஒப்பந்தப்படி நாடற்றமக்களாக இருக்கும் 93,000 தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கும் எண்ணம் இலங்கை அரசுக்கு இல்லை. வாக்குறுதியைக் காப்பாற்ற இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்'

இலங்கை அரசாங்கம் வாக்களித்தபடி, ஒப்பந்தம் செய்தபடி நாடற்றவர்களாக இருக்கும 93,000 பேருக்கு உடனடியாக குடியுரிமை வழங்கப்பட வேண்டும். இனப் பிரச்சினைகளுக்கு தீர்வுகான நடத்தப்படும் பேச்சு வார்த்தைகளில் நாடற்றவர்களாக இருக்கும் இந்திய வம்சாவழி மக்கள் - மலையக தமிழர் பிரச்சனையும் இடப் பெற்றாக வேண்டும்.

புதுடெல்லியில் அணிசேரா நாடுகளின் மகாநாடு நடந்த போது ஜனாதிபதி ஜெயவர்த்தனா 93,000 பேருக்கு குடியுரிமை வழங்க வேண்டியது தன்னுடைய கடமை என கூறினார். இந்திய அரசாங்கத்துடன் இது குறித்து தான் பேச வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார். இனப்பிரச்சனையை தீர்க்க இலங்கையில் கூட்டபட்ட வட்டமேசை மாநாட்டில், பௌத்த மகா சங்கத்தினர் நாடற்ற மக்களுக்கு உடனடியாக குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென குரல் எழுப்பியது.

தோட்டத் தொழிலாளர்கள் இந்தியா செல்ல எத்தனித்த போது இலங்கை அரசாங்கமே அதிர்ச்சி அடைந்தது. இதனை தடுக்க தொண்டமான் தமிழகம் வந்து, தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிகள் செய்யப்பட்டன.

இந்தியா செல்ல வேண்டுமென்ற எண்ணத்தை மாற்ற, 'தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையின் உண்மையான உழைப்பாளிகள், அப்பாவிகள். அவர்களை பாதுகாக்க வேண்டியது அவசியம்' என்று தோட்ட அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கியது. இதற்கு இரு அவசியங்கள் இருந்தன. ஒன்று பொருளாதாரப் பிரச்சனை, இரண்டு இந்தியாவின் தலையீட்டை தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்பது.

இலங்கையின் பொருளாதாரம் தோட்டத் தொழில் துறையில் தான் தங்கியுள்ளது. இதன் முதுகெலும்பாக இருப்பவர் இந்திய வம்சாவழி மக்களே. இவர்கள் வெளியேறினால் பொருளாதாரம் பெருமளவு பாதிக்கப்படும். மேலும் இந்திய வம்சாவழி மக்களின் பிரச்சினை இந்தியாவோடு தொடர்புடையது. இதனை காரணமாக கொண்டு இந்தியா இலங்கையின் மீது படையெடுக்கவோ அல்லது தலையிடவோ வழியுண்டு ஆகவேதான் 93,000 பேருக்கு குடியுரிமை வழங்குவது அவசியம் என பௌத்த மகாசங்கத்தினரும், இலங்கை அரசாங்கமும் அக்கறை காட்டியது.

தற்போது நிலைமை மாற்றமடைந்துள்ளது. இந்தியா இலங்கையின் மீது படையெக்கவோ அல்லது தலையிடவோ முடியாது, காரணம் அது உள்நாட்டு பிரச்சனை என தட்டிக் கழிக்க ஆரம்பித்துவிட்டதே. இனப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளியிட இந்தியா உதவி வருகின்றது.

தற்காலிகமான யுத்த நிறுத்தமானது இந்தியாவின் தலையீடு காரணமாகவே சாத்தியப்பட்டது. இலங்கை இந்தியாவின் மீது பாராட்டிய பகைமையுணர்வை மறந்து பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வுகாண இந்தியாவின் உதவியை நாடியுள்ளது.

இத்தருணத்தில் நாடற்ற மக்களாக இருக்கும் அனைவருக்கும் குடியுரிமை வழங்க வேண்டுமென இந்தியா வலியுறுத்த வேண்டும். இதுவே மிகவும் நல்ல தருணம் ஆகும். நாடற்றவர்களுக்கு குடியுரிமை வழங்குவதிலிருந்து இலங்கை அரசாங்கம் நழுவிக் கொண்டிருப்பதை இந்தியா உணரவேண்டும். அகதிகளாக இந்தியாவுக்கு வந்து சேரும் மக்களை காத்து அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க வேண்டிய கடமை இந்திய அரசுக்கு உள்ளது. ஏற்கனவே வந்து சேர்ந்த அகதிகளையே சமாளிக்க முடியாத சூழலில் தவித்துக் கொண்டுள்ளனர்.

குடிரியுமை வழங்க வேண்டுமென கூக்குரலிட்ட பௌத்த மகா சங்கம் தற்போது அவ்வாறு குடியுரிமை வழங்கப்படுவது சிங்கள மக்களுக்கு இழைக்கப்படும் துரோகம் என கூறுமளவிற்கு மாறிவிட்டது. இப்படி நேரத்திற்கு ஒரு வேஷம் போடும் கபடதாரிகளின் செயல்களை இந்திய அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய வம்சாவழியினர் இந்தியா செல்ல முயன்றபோது தமிழகத்திற்கு தூது வந்த தொண்டமான் போன்றவர்களும் மௌனம் சாதிக்கின்றனர். இந்திய அரசாங்கத்திடம் பணிந்து செல்வதாக காட்டிக் கொள்ளும் ஜெயவர்த்தனா அரசின் சூட்சுபங்களை, குள்ளநரித்தனமான வேலைகளை சரியாக உணர வேண்டியுள்ளது.

(8-ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் மறுவாழ்வு

மலர் : 3 ஆடி-ஜூலை-'85 இதழ் : 10


## இனப்பிரச்சனைக்கு தீர்வு

இலங்கை மண்ணில் பல ஆண்டுகளாக தொடர்ந்து நீடித்து வந்த தமிழர்-சிங்களவர் என்ற இன வேற்றுமைக்கு முற்றுப்புள்ளியிட முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. நிரந்தரமான தீர்வு ஏற்பட அனைவரும் விரும்புகின்றனர்.

தமிழர்-சிங்களவர் என்ற வேறுபாட்டிற்கு உரமூட்டி அரசியல் லாபம் தேடிய கட்சிகள், தலைவர்கள் பலர் உண்டு. ஏகாதிபத்திய நாடுகளும் இப்பிரச்சனையை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தது. ஆயுதங்களை விற்பனை செய்து சில நாடுகள் வியாபாரமும் செய்தன. மனித உரிமைகளின் அத்துமீறல்களை தொடர்ந்து வெளிப்படையாக ஏகாதிபத்திய நாடுகள் தலையிடுவதை தவிர்த்ததுவே தற்போதைய பேச்சு வார்த்தைகளின் உடன் பாட்டிற்கு அடிப்படை.

திட்டமிட்டு கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறைகளை எந்த இனமும் அதிக காலம் பொறுத்திருக்க முடியாது என்பதற்கு உதாரணமே ஈழ விடுதலை போராட்டம். ஆயுதமேந்திய விடுதலைகுழுக்களின் தாக்குதல்களால் பொருளாதாரம் படுவீழ்ச்சியடைந்துவிட்டது. சிங்கள பேரினவாத அரசின் செய்கைகள் சிங்கள மக்களையே வெறுப்படையச் செய்துள்ளது.

நீண்ட காலந்தொட்டு தொடரும் இனப்பிரச்சினைக்கு சரியான அரசியல் தீர்வே முற்றுப்புள்ளியிட இயலும். இதனை உணர்ந்து இரு இனத் தலைவர்களும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இந்திய அரசு அதிக அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படுவது அதன் பாதுகாப்பிற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும்.



## எங்கள் பிரச்சனைகள்

### எங்கள் வாழ்வு வளம்பெற வழிகள் ஏதும் உண்டா

1983 ஜூலை மாதம் இலங்கையில் நடந்த இன கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வீடு பொருள் எல்லாவாற்றையும் இழந்து— பிள்ளைகளை மட்டுமே காப்பாற்றிக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தோம்,

ராமேஸ்வரம் வந்த எங்களை தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி திட்டத்தின் கீழ் ராணிபேட்டையிலுள்ள மாலக் லெதர் கம்பெனியில் வேலையில் அமர்த்தினார்கள்.

குடும்பத்தில் எத்தனைப் பேர் இருந்தாலும் ஒருவருக்கு மட்டுமே வேலை, நாளொன்றுக்கு ரூபாய் 10/- மட்டுமே சம்பளம். இதுவும் வேலைக்கு செல்லும் நாட்களுக்கு மட்டுமே. சுகவீனம் என்று வீட்டில் நின்று விட்டாலும் அன்று சம்பளம் வெட்டப்பட்டு விடும். வேறு எந்த உதவியும் இல்லை.

வீட்டு வசதி இன்னும் கிடைக்கவில்லை; மறு வாழ்வு திட்டத்தின் எங்களுக்கு கிடைக்சுவேண்டிய வீட்டுக்கடனைக் கூட எங்களால் இன்னும் பெற முடியவில்லை. வாடகை வீட்டிலேயே இருக்கிறோம். இந்த வாடகையைக் கூட எங்களால் செலுத்த முடிய வில்லை.

திருமணவயதில் இருக்கும் பெண்களை எங்களால் கரை சேர்க்க முடியாது தவிக்கிறோம். பிள்ளைகளை படிக்க வைக்க முடியவில்லை.

போதிய வருமானம் இல்லாது சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்து வரும் எங்களுக்கு மறு வாழ்வு திட்டத்தில் வேறு ஏதும் உதவுகள் உண்டா? குடும்பத்தில் இருவருக்கு வேலை அல்லது வியாபாரக்கடன் கிடைக்குமா? விதவைகளாகிய நாங்கள் எங்கள் குடும்பங்களை வாழ வைக்க முடியாமல் துன்பப் படுகிறோம்.

போதிய வருமானத்தை பெற்று பொருளாதாரத்தில் மேம்பாடடைய எங்களுக்கு ஏதேனும் வழிகள் உண்டா?

எம். பார்வதி,

வி. வேதமணி,

எம். மாரியாய்,

வி. லெட்சுமி

வி. சி. மோட்டூர்

வாலாஜா

வ. ஆ. மாவட்டம்

# எதுமலை காலனிக்கு ஏதேனும் செய்யுங்கள் !

இக் காலனி திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்தில் எதுமலை கிராமத்தின் கிழக்கு எல்லையில் இருக்கிறது.

தாயகம் திரும்பிய அகதிக்காக ஆரம்பிக்கப்பட்ட இக்காலனியில் 1973-ம் ஆண்டு 26 தாயகம்திரும்பிய குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டார்கள்.

விவசாயம் செய்வதற்காக 3ஏக்கர் நிலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது. வீட்டுக்கடனும் விவசாயக்கடனும் வழங்கப்பட்டது. வீடுகட்டுவதற்கு, கிணறு வெட்டுவதற்கு, மாடு வாங்குவதற்கு, நிலம் சீர்திருத்துவதற்கு, விதை வாங்குவதற்கு, விவசாயக் கருவிகள் வாங்குவதற்கு என்றும் ரூபா 6149/— வீதம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட்டது.

ஆனால் இவற்றை சுலபமாக பெற்று விட வில்லை; 1981-ம் ஆண்டு வரை பலமுறை பஸ் ஏறி அலைக்கழிக்கப்பட்டதன் பின்தான் இந்த கடனு உதவிகளை பெற்றோம்.

இந்த கடனை வழங்கும் போது, வீடுகட்டும் கடனை எங்கள் பொறுப்பில் வழங்க வில்லை. அதிகாரிகள் கூறிய காண்டிரக்டர்வசம் ஒப்படைத்தோம். கிணறு வெட்டவும் இதே போல் தான் வழங்கப்பட்டது. அரசு கொடுத்த கடனை கையெழுத்து போட்டு வாங்கி உரிய அதிகாரி முன்னிலையில் காண்டிராக்டரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிலையில் ஒப்படைத்தோம். (அப்போது பஸ் செலவுக்கு மட்டும் ரூபா 10/— ஒவ்வொருவருக்கும் கொடுத்தார்கள்).

பணத்தை வாங்கிய காண்ட்ரக்டர்களோ விட்டு வேலைகளை செய்தும் செய்யாமலும்—பாதியிலேயே மீது பணத்தோடு ஓடிப்போனார்கள்.

1975-76 யில் பஞ்சம் எங்களை சூழ்ந்துக்கொண்டது. வறட்சியால், வெட்டப்பட்ட கிணறுகளில் தண்ணீரைக் காண முடியவில்லை. குடிநீர் இல்லை; மாடுகளுக்கு தீவனம் இல்லை. விற்றாலும் வாங்குவதற்கு ஆட்களில்லை. அத்துணை பஞ்சம்.

பிழைக்கலாம் என்று வெளியேசெல்ல தயாரானால், 'காலனியைவிட்டு வெளியேறுகிறவர்களுக்கு நிலம் வீடு இல்லை; நிலம், வீட்டை அரசு திரும்ப சுயாதீனப் படுத்திக் கொள்ளும், என்று முசிறி மறு

## சென்று விடுமெல்லாம்

வாழ்வு அலுவலகத்திலிருந்து அனைவருககும் எச்சரிக்கை நோட்டீஸ் வந்து பயமுறுத்தியது. இதற்கு பயந்து இருப்பதை விற்று தின்றோம். இந்த பஞ்சத்தால் 6 வயது சிறுவன், 60 வயது கிழவன் என்று இருவர் இறந்திருக்கிறார்கள்.

அப்போது அதிகாரிகளிடம் முறையிட்டபோது தொழிற் நிலையம் ஏதேனும் அமைத்துக் கொடுக்கிறோம் என்று வெள்ளைப் பேப்பரில் கையெழுத்துப் பெற்றுக் சென்றார்கள் அவ்வளவுதான்.

1981- யில் மின் விளக்கு எங்கள் காலனிக்கு வழங்கப் பட்டது. அதற்கு முன் இரவு நேரங்களில் நரி, பாம்பு, தேள் முதலின விஷ ஐந்துக்களில் தொல்லைக்கு ஆளாகிவந்தோம். அவற்றின் கடிப்பட்டு சிகிச்சைப்பெற்றவர்கள் பலர்.

1977 யில் ஏற்பட்ட கடுமையான புயல், மழையில் 11 வீடுகள் இடிந்து தரைமட்டமாயின மற்ற வீடுகளும் இடிபாடுகளுக்குள்ளாயின. இவற்றிற்கு அரசு தலா ரூபா 200/— உதவிப் பணமாகவும், தேவையான பொருட்களும் கொடுத்துதவியது.

ஆனால் புயலால் இடிந்த வீடுகளை கட்டிக்கொள்ள எந்த உதவியும் கிடைக்க வில்லை. இதே வேளையில்தான் ஒரு கிறிஸ்தவ மிஷன் உதவி கிடைத்தது. அவர்களிடம் சென்று எங்கள் நிலைமையை எடுத்துரைத்ததும் ஒவ்வொரு விட்டுக்கும் ரூபா 1000/ என்று ரூபா 27,000/. செலவு செய்து எல்லா வீடுகளையும் இலவசமாகக்கட்டிக் கொடுத்தார்கள். அதோடு உணவுக்கு கோதுமையும், குழந்தைகளுக்கு பால் உணவும் வழங்கினார்கள்.

இதே மிஷன் 1976 பஞ்சத்தின் போது மூன்று மாதங்கள் நபர் ஒன்றுக்கு 1 பக்கா அரிசி கொடுத்து உதவியது குறிப்பிடத்தக்கது.

அந்நாளிலிருந்து நாங்கள் விவசாயம் செய்யவோ, வேறு தொழில் செய்து பிழைக்கவோ வழியில்லை; பக்கத்து ஊர்களிலும் வேலை கிடைப்பது அரிது. எல்லா ஊர்களுமே பஞ்சத்தில் வாடும் போது எங்களுக்கு யார் வேலை கொடுப்பார்கள்.

இந்த நிலையில், விவசாயம் செய்ய கிணறுகளை ஆழப் படுத்திக் கொடுக்கும்படி உரிய அதிகாரிகளை கேட்டோம் ஆளுக்கு ஒரு ஏக்கர் பாசனம் செய்ய ஒரு கிணற்றை ஆழப் படுத்தி மோட்டார் பம்ப் போட்டுக் கொடுங்கள் என்று கேட்டோம். அல்லது ஏதேனும் சிறு தொழில் செய்ய உதவுங்கள் என்று கேட்டுப் பார்த்தோம். தேயிலைத் தோட்டங்களுக்கு போக உதவும் படியும் கேட்டு விட்டோம்

இவற்றை எல்லாம் கேட்டு எத்தனை மனுக்கள் எழுதினோம் எதற்கும் பயனில்லை.

எங்கள் நச்சரிப்பு தாங்காமல் "சிறைக்குத்தான் செல்ல வேண்டும்" என்று அதிகாரிகள் பயமுறுத்தினார்கள். 4 முறை போலீஸ்விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறோம்.

ஒரு முறை தொகுதி எம். எல். ஏ. வந்தார். 'நரிக் குறவர்கள் வாழ்க்கை பரவா இல்லை. நீங்கள் என்னமாய் உயிர் வாழ்கிறீர்கள்? என்று அவர் கேட்டு விட்டு போன தோடு சரி.

எங்களுக்கு இப்போது தேவை—தொழிற் செய்துப் பிழைக்க ஏதேனும் வழி. இதற்கு ஒரு தொழிற் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். விவசாயம் செய்து பிழைப்பதென்றால் கிணறுகளை ஆழப்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இது வரை வழங்கப்படாத வீட்டு மனை பட்டாவை உடன் வழங்க வேண்டும்.

மற்றும் பிள்ளைகள் படிக்க வசதி, வானொலி மன்றம் தேவை.

ஏ. பழனியாண்டி

எதுமலை காலனி

திருச்சிமாவட்டம்.

# ஜயவர்தனாவின் சாணக்கியமும் இந்தியாவின் நல்லெண்ண

**''இந்திய அரசுக்கு இணங்குவது போல் பாசாங்கு செய்வது இலங்கை அரசியல் வாதிகளின் சாணக்கியம்' இதனைப் பலமுறை செய்துள்ளார்கள். வெற்றிகரமாகச் செய்துள்ளார்கள். மலையகத் தமிழ் மக்களின் உரிமைப்பறிப் பதில் வெற்றி கண்டது யார்? சிங்கள அரசியல்வாதிகளா? அல்லது இந்திய அரசியல் வல்லுநர்களா? இன்றைய இலங் கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தையும் தனது சாணக்கியத்தாலும், சாகசத்திலும் இந்திய அரசின் நல்லெண் ணத்தைக் கருவியாகக் கொண்டு, முறியடிக்க முனைந்து வருகிறது. இந்திய அரசு மீண்டும் ஒரு முறை சிங்கள அரசி யல் வாதிகளிடம் ஏமாளியாகி விடக் கூடாது''**

இலங்கை அதிபர் ஜயவர்தனா புதுடில்லி வந்தார்; போனார். இந்தியப் பிரதமரோடு வானில் பறந்து சென்று வங்காள தேசமக்களின் சொல்லொனாத்துயரைக் கண்டு ஆறுதல் கூறினர். இந்தியப் பிரதமருக்கு, பௌத்தத்தைப் பற்றியும், அகிம்சையைப் பற்றியும், போதித்தாராம். இலங் கையில் வன்முறைகளும், இனக்கொலைகளும் நிறுத்தப்பட வேண்டுமென்றும், அதற்கு ஆவன செய்யப்படவேண்டு மென்றும், ஒப்புக்கொண்டாராம்.

ஜயவர்தனாவின் பேச்சையும், உறுதியையும் யாரால் நம்பமுடியும்? ஜயவர்தனவின் அரசியல் வாழ்வு முழுமை யும் சாகசமும், சதியும், பொய்மையும் நிறைந்ததென்பதை இந்திய அரசியல் வாதிகளைவிட, இலங்கை அரசியல் அவ தானிகள் நன்குணர்வார்கள். மறைந்த பிரதமர் இந்திரா காந்தியோ ஒப்புக்கொண்ட முடிவுகளை, கொடுத்த வாக் குறுதிகளை இலங்கை சென்ற உடனேயே காற்றில் பறக்க விட்ட ஜயவர்தனா அவருடைய அரசியல் நேர்மைக்கு ஒரு உதாரணத்தை இந்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளார். பேச்சுவார்த்தைகள் மூலமே இலங்கைத் தமிழரின் சுய உரிமை கோரிக்கைக்கு தீர்வு காண வேண்டுமென்று ஒப்புக் கொண்ட ஜயவர்தனா, எந்தத் தீர்வும் இல்லாமலேயே அனைத்துக்கட்சி பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்! அவரின் அரசியல் சாகசத்திற்கு இது ஒரு சாம்பிள். அகிம்சை போதிக்கும் நவீன புத்தராக தன்னைக் கற்பனை செய்து கொண்டு ஜயவர்தனா, தமிழர்களைக் கொல்லும் ஒரு சதித் திட்டத்திற்குத் தந்தை. இன்று நேற் ஏல்ல, 1965ம் ஆண்டு முதலே 'தமிழனைக் கொல்' என்ற தேர்தல் கோஷத்தை எழுப்பியவர் ஜயவர்தனா. 1983ம் ஆண்டு ஜூலை தமிழினப் படுகொலைக்கு வித்திட்டவர் ஜயவர்தனாதான் என்று அவரது முன்னால் சகாவான சிரில் மத்தியூ என்ற மாஜி மந்திரி அண்மையில் கூறி யிருக்கிறர்.

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு இந்தியாவின் ஒத் துழைப்பு அத்தியாவசியம் என்று கூறிக் கொள்ளும் ஜயவர் தனாவின் அரசாங்கம். இந்தியத்துவேஷத்தை பல ஆண்டுகளாக வளர்த்து வந்திருக்கிறது இந்தியாவிற்கு எதிராக, இங்கிலாந்து, அமெரிக்கா நாடுகளிடம் சென்றும் ஆயுத உதவி கேட்டவர்; இன்று புதுடெல்லிக்கு அகிம்சை உபதேசம் செய்ய வந்திருக்கிருர்! சமாதானம் என்றல் சமா தானம்; போர் என்றல் போர்; என்று தமிழர்களுக்கு சவால் விட்ட ஜயவர்தனா, இஸ்ரேல் மொஸ்ஸாட் உளவாளி களையும், S. A. S. இராணுவ ஆலோசகரிடம் ஆலோசனை கேட்ட ஜயவர்தனா பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காணு வதில் நம்பிக்கை உள்ளவர் தானா? இன்னும் இராணுவத் திற்கு ஆள் திரட்டுவதிலும், இராணுவ தளவாடங்கள் வாங்குவதிலும் அக்கறை கொண்டு 20 கோடி ரூபா பாது காப்பிற்கு ஒதுக்கியுள்ள ஜயவர்தானா சமாதானத்தீர்வில் நம்பிக்கை உடையவர் தானா? தமிழர்கள், இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்படுவதை இல்லை என்று மறுக்கும் ஜயவர்தனா அரசாங்கம், அகிம்சையில் நம்பிகை உடையது தானா? பண்டாரநாயகா பிரதமராக இருந்தபொழுது தமிழ் தலைவர் செல்வநாய கத்துடன் செய்து கொண்ட உடன் படிக்கைக்கு எதிராகப் போராட்டம் நடத்திய ஜயவர்தனா தமிழ் மக்களின் நலனில் உண்மையாகவே நாட்டம் கொண்டவர் தானா? தனது தலைமையில் சிங்களவர்களின் கௌரவம் பாதிக்கப் படக்கூடாது எனத் தீவிரமாக நம்பும் ஜயவர்தனா தமிழர் களுக்கு சுயாட்சி வழங்க சம்மதிப்பாரா? ஜயவர்தனா நியாயமான வழியில் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்திற்குத் தீர்வுகாண்பார் என்று நம்புவதற்கு எந்தவிதமான ஆதாரமுமில்லை.

இலங்கையில் ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் சிங்களவர்களின் பெரும்பான்மை ஆதரவை நம்பியிருப்பவர் கள். தமிழர்களின் நியாமான அரசியல் கோரிக்கைகளுக்கு சிங்களவர்களில் பெரும்பாலானோர் ஆதரவு வழங்கியதே இல்லை. சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக ஒரு காலத்தில் தீவிரமாகப் போராடிய சமசமாஜக் கட்சித் தலை வர்கள் ஆட்சி பீடம் அமர்ந்ததும் சிறுபான்மைத் தமிழர் களின் அடிப்படை உரிமைகளைப் பற்றிய தமது கோட்பாடு களை அரசியல் நலன்கருதி மாற்றிக் கொண்டார்கள். இன்றைய சூழ்நிலையில் இனப் பகைமை உச்சகட்டம் அடைந்துள்ள நிலைமையில், பெரும் பான்மை மக்களின் மனப்போக்குக்கு எதிராகவும், இன்று இலங்கை அரசியலில் குரங்குச் சேட்டை செய்யும் பௌத்த குருமார்களுக்கு எதிரா கவும், இன்று இலங்கை அரசியலில் பூதாகர சக்தியாக வளர்ந்திருக்கும் இராணுவத்திற்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கு சுயாட்சி வழங்கும் சக்தியோ, மனத்திடமோ, நேர்மைத்திறனே ஜயவர்தனா அரசாங்கத்திற்குக் கிடை

## மும்

யாது. ஆகவே பேச்சுவார்த்தைகள் மூலமாகவோ, உடன்படிக்கை மூலமாகவோ தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முடிவு பெறச் செய்யலாமென்பது பகற்கனவுதான். இந்தப்பகற்கனவை நனவாக்கலாம் என்று இந்திய அரசு நம்பினாலும் நாம்நம்பத்தயாராக இல்லை,

இந்திய அரசுக்கு இணங்குவது போல் பாசாங்கு செய்வது சிங்கள அரசியல் வாதிகளின் சாணக்கியம்.இதனைப் பலமுறை செய்துள்ளார்கள். வெற்றிகரமாகச்செய்துள்ளார்க்ள்.

மலையகத் தமிழ் மக்களின் உரிமையை பறிப்பதில் வெற்றி கண்டது யார்? சிங்கள அரசியல் வாதிகளா அல்லது இந்திய அரசியல் வல்லுநர்களா? இன்று இலட்சக்கணக்கான மலையகத்தவர்கள் இந்தியாவில் நிரந்தர அகதிகளாக சொல்லொணாத் துயர்பட்டு துஞ்சுவதற்கு வழி

**பிறைசூடி**

வகுத்தது யார்? நேரு போன்ற ஒரு மாபெரும் ஆசிய அரசியல் தலைவரையே அலட்சியப் படுத்தியவர் இலங்கைப் பிரதமர் சேனநாயகம். அவர் வழி வந்த கொத்தலாவலை பாந்துங் மாநாட்டில் நேருவை அலட்சியப்படுத்திப் பேசினார். சீன இந்தியப் போராட்டத்தைப் பயன்படுத்தி, சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மலையகத்தமிழர்களைச் சிதைத்து இரு நாடுகளிலும் அவர்கள் நசுக்கப்பட்ட சிறுபான்மையராகத் துன்புறும் நிலையை உருவாக்கியது சிங்கள அரசியல் சாணக்கியம். மலையகத் தமிழர்களின் போராட்டத்தை வெற்றிகரமாக முறியடித்துவிட்ட சிங்கள அரசியல், இன்றைய இலங்கைத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தையும், தனது சாணக்கியத்தாலும், சாகசத்தாலும் இந்திய அரசின் நல்லெண்ணத்தைக் கருவியாகக் கொண்டு, முறியடிக்க முனைந்து வருகிறது. இந்திய அரசு மீண்டும் ஒருமுறை சிங்கள அரசியல் வாதிகளிடம் ஏமாளியாகிவிடக் கூடாது என நாம் எச்சரிக்கிறோம்.

இந்தியாவுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதிலும், வல்லரசுகளோடும், பிறநாடுகளோடும் இந்திய அரசு எதிர்ப்பு அணிதிரட்டத்தயங்காத இலங்கை அரசு இன்று ஏதோ திடீர் மனமாற்றம் அடைந்து விட்டதாக கருத முடியாது. இலங்கைத்தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படும் பொழுதும், இனக் கொலைகள் நாளாந்த நடவடிக்கைகளாக மாறிய பின்னரும், இலங்கைத்தமிழர்களின் வாழ்வும், வளமும் முற்றாகச் சீர்குலைந்த பின்னரும், அவர்கள் உலக அகதிகளாக உயிர் காக்க உலகெல்லாம் புகலிடம் தேடித்திரியும் பொழுதும், அகதிகள் முகாம் காடுவதைவிட, ஆகார வசதிகள் தருவதைவிட வேறொன்றும் செய்ய முடியாத நிலையில் தமிழ் நாடு தவிப்பதை எண்ணும் போது நெஞ்சம் கலங்குகிறது. துச்சாதனன் துகிலுரிந்த போது, கைகட்டிப் பார்த்திருந்த பாண்டவர்களைப் போல், இன்று இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைகளைப் பார்த்து, டெல்லி நோக்கிப் பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாத தமிழகஅரசின் நிலை பரிதாபத்திற்குரியது தான். ஆனால் கிருஷ்ண பகவானைப் போல், துகில் கொடுத்து மட்டுமல்ல, பாரதப் போரில் தேரோட்டியாய் வெற்றிக்கு வித்திட்ட வகையில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தீவில் தமிழ்மக்களின் உரிமைப் போரில் வெற்றிகரமாக தேரோட்டுவாரா?

மக்கள் மறுவாழ்வில்
விளம்பரம் செய்து
பயனடையுங்கள்

# இலங்கையின் தேசீய இனப்பிரச்சனையும் மலையக மக்களும் (5)

-: மலை அரசி :-

இலங்கையின் முதலாளித்துவ சமூக உருவாக்கமே பூர்வீகத் தமிழ் மக்களையும், சிங்கள மக்களையும் தேசிய இனமாக வளர்த்துச் சென்றது. இவர்கள் 'வரலாற்று வழி வந்த மக்கள் தொகுதி அதாவது முதலாளித்துவ வரலாற்று வழி வந்த மக்கள் தொகுதி.

இதேபோல மலையகத் தமிழ் மக்களும் வரலாற்று வழி வந்த மக்கள் தொகுதி தான். அது நிகழ்ந்த களம் இலங்கையின் மலைப்பகுதிகளைக் கொண்ட தேயிலை ரப்பர் உற்பத்திக்கான பூகோளப் பகுதிதான். நிலப் பிரபுத்துவ காலத்தில் சிங்கள மக்கள் அங்கே வாழ்ந்திருந்தார்கள் என்ற காரணத்திற்காக அது அந்த இனத்தின் பூகோளப் பரப்பாக முடியாது. அவ்வாறே மலையக மக்கள் அங்கே குடியேற்றப்பட்டார்கள் என்பதற்காக மலையகத் தமிழ் மக்களின் பூகோள நிலப் பரப்பாகவும் முடியாது.

இந்த முதலாளித்துவ சமூக உருவாக்கத்துடன் சேர்ந்து வளர்ந்து பரிணமித்த இந்த இரண்டு இனங்களுக்கும் (மலையகத் தமிழர்கள், சிங்கள மக்கள்) அது தேசிய இனத்தின் தாய் பூமிதான். அதுவே அவ்வவ் இனங்களின் பூகோளப் பரப்பாகும். (இதனை வசதிக்காக—அதாவது தேசிய இனச் சிக்கலை தீர்க்கும் பொருட்டு எல்லை வகுத்துக் கொள்ளலாம்)

நாம் நமது கேள்விக்கு வருவோம். ஒரு இனத்தின் பூகோளப் பரப்பை வரையறுப்பது ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டத்திலும் வித்தியாசப்படுகின்றது. அடிமைச் சமுதாயத்தில்வேட்டையாடும் நிலப்பரப்பையும், மக்கள் செறிந்து வாழும் நிலப்பரப்பையும் உள்ளிட்டதாக அந்த இனச் சமூகத்தின் பூகோளப் பரப்பு அமைந்தது. அவ்வாறே அரசியல் எல்லையும் அமைந்தது. அது அடுத்த இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தாதிருந்தது.

நிலப் பிரபுத்துவ சமூக உருவாக்கக் கால கட்டத்தில் உற்பத்திக்கான களமாகி இருந்த நிலப்பரப்பும், குடியிருப்பு, கோட்டைகள், நகரங்கள் உள்ளிட்டதும் யுத்தத்தால் இதர இனங்களிலிருந்து பெற்றுக் கொண்டதுமான நிலப்பரப்பு, அந்தந்த இனச் சமூகத்தின் நிலப்பரப்பாக இருந்தது.

ஆனால் முதலாளித்துவ சமூக உருவாக்கம் நிகழ்ந்த காலத்தில் இவைகள் தகர்க்கப்பட்டன. அரசியல் எல்லைக்குள் முழு நிலப்பரப்பும் கொண்டு வந்து சேர்க்கப் பட்டது. ஒரு தனி இனம் (பல இனங்கள் வாழும் நாட்டில்) உரிமை கொண்டாட அது இடம் கொடுக்கவில்லை.

ஆகவே இனிமேல் நாம் இலங்கையில் நிலப்பிரபுத்துவ அரசியல் எல்லைக்குள்ளே நின்று இனத்திற்கான பூகோள பரப்பைத் தேட முடியாது. மாறாகத் தேசீய இனச் சிக்கலைத் தீர்ப்பதற்கான சோஷலிஸ வழிமுறைகளிலிருந்து மலையக மக்களுக்கான பூகோளப் பரப்பைப் பார்க்க வேண்டும்.

(தொடரும்)

# சமுதாய ஒருங்கிணைப்பு

தாயகம் திரும்பியோர்கள் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இந்த பிரச்சசைகளுக்கு தீர்வு காணவும் இம்மக்கள் மத்தியில் நல்வாழ்வு மலரவும் அவர்கள் மத்தியில் பல்வேறுபட்ட அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன.

இந்த அமைப்புகள் தம்மை புரிந்துணரவும், தமக்குள்ளே ஏற்படவேண்டிய ஒருங்கிணைப்பின் அவசியத்தை அறிந்திட இக்கட்டுரையை பிரசுரிக்கிறோம்.

சமுதாயத்தைஒருங்கிணைப்பது எவ்வாறெனில் சமுதாயத்தில் உள்ளப் பிரச்சனை என்ன? அந்த பிரச்சனைக்குத் தீர்வு காண முனைவது எது? அந்த சக்தி யாரிடத்தில் அதிகமாக உள்ளது. இவ்வாறு அலசி ஆராய்ந்து நோக்குகையில் இன்றைய நடைமுறையில் நிச்சயம் அமைப்புகள் தேவைதான். ஆனால் அந்த அமைப்புக்கள் தங்களின் நோக்கங்களையும், திட்டங்களையும் ஒழுங்கான முறையில் செயல் படுத்தாமைக்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று ஒருங்கிணையாமல் இருப்பது தான். மேலும் இந்த வாய்ப்பு ஏற்படுமே தவிர வாழ்வு மலரவும், தளிரவும் வழிகள் ஏற்படாமல் இருண்ட எதிர்காலமே ஏற்படும்

ஆகவே இக்கட்டுரையின் வாயிலாக சமுதாரப் பிரச்சனைகள் என்ன? அவற்றை தீர்வு காண மேற்கொள்ளும் முயற்சிகள், முயற்சிகளை எடுக்கும் போது செயலாக்கத்தினைப் பற்றிய சிந்தனை, அதனால் ஏற்படும் நன்மைகள் தீமைகள் ஒவ்வொன்றையும் கூறுப்போட்டுப் பார்த்து ஒருங்கிணைவதின் ஆக்கபூர்வமான மாறுதல்களை எடுத்துரைப்பதே முன்னுரையில் சமர்பிக்கப்படுகிறது.

முதன் முதலில் மனிதன் வாழ்க்கையை நடத்தத் துவங்கினான். முதலில் அவனது வாழ்க்கை காடுகளிலும் மலைகளிலும் நீரோடை பகுதிகளிலும் நடந்தது அந்நேரத்தில் அவனுக்கு கட்டுப்பாடுகளும், கடமைகளும் கிடையாது இப்போது ''பரிபூரண சுதந்திரம்'' எங்கே என்ற கேள்விக்கு விடையளிக்க நினைத்தால் பழைய நிலைக்கு போய் எட்டிப் பார்த்தால் புலப்படும் போல் தெரிகிறது. தேவை இன்னது தான் என்ற வரைமுறை இல்லை. அதாவது அவனுக்கு பற்றாக் குறை என்பதே இல்லை. ஆனால் இந்தப்பற்றுக் குறை என்பது இன்றைக்கு அளவிட்டு பார்க்க முடியாத அளவிற்கு உள்ளது. சுதந்திரமாக வாழ்ந்த மனிதனின் வாழ்க்கையில் சலனங்கள் ஏற்பட்டன. இதனால் தனக்குள் அமைப்புகள் உருவாகத் துவங்கின.


அதாவது வலிமைமிக்க ஒருவன் சில மனிதர்களை அடக்கி அடிமைப்பட்ட அந்த கூட்டத்திற்கு தலைவன் ஆனான். இம்மாதிரி தனித் தனியே கூட்டமாக வாழ்ந்தவர்கள் பிறக் கூட்டங்களை அடிமையாக்கி தங்கள் கூட்டத்தை வளமாக்கினார்கள். இந்த கூட்டங்களில் சில நூறு ஆண்டுகளுக்கு பிறகு மன்னர்களாகமாறினார்கள். மன்னர்கள் இதனால் தமதுகுலம் ஒரு ஆளத் தெரிந்த குலமாகவும் (இனமாகவும்) தங்களுக்கு உபதேசம் ஓதுபவர்களை கடவுளுக்கு ஒப்பானவர்களாகவும்கருதி குருவாகவும் செயல் படுத்தினர். தங்களின் செயலுக்கும் திட்டத்திற்கும் உறுதுணையாக இருந்தவர்களை அமைச்சர்களாகவும், இவர்களின் ஆணைக்கு உட்பட்டு ஏவல் புரிபவர்களை பணியாளர்களாகவும் அதற்கும் கீழானவர்களை குடிமக்களாகவும் கருதி செயல்பட்டனர். 19 ஆம் நூற்றாண்டில் இம்முறைகள் மாறுதல் அடைந்து சிலநாடுகள் குடியரசுநாடுகள் என்ன விளக்கத் தொடங்கின.

ஆனால் முதலில் குறிப்பிட்டது போல் தனிப்பட்ட மனிதனின் நிலைதான் (உயர்வுதான்) சிலபேர் வீழ்ச்சி அடைவதற்கு காரணங்களாக உருவாகின்றன. அதாவது மனிதன் தேவைக்கு பொருளாதாரம் ஒரு முக்கிய அம்சமாக மாறியது. பொருளாதாரத்தின் விளைவாக நாட்டில் ஏழைப் பணக்காரன் என்ற இரு பிரிவுகள் ஏற்பட்டன. இந்த இரு பிரிவுகள் மனிதனை சில தாழ்மையான நிலைக்கு கொண்டுச் சென்றது. இதனால் உழைக்கும் வர்ககங்களின் உடல்கள் மெலிந்தன. தோல்கள் கருகின. இதனால் நிறவேற்றுமை உண்டாகியது உழைப்பவர்கள், சீர்கேடானவர்களாகவும், உழைப்பற்று முளையை பலவழிகளில் புகுத்தி முன்னேறியவர்கள் மேன்மையானவராகவும் வாழ்ந்தனர் இம்மாதிரி சொல்லாலும் செயலாலும் நிறத்தாலும் வேற்றுமை படுத்தி ஜாதி வெறிகள் உண்டாகின்றது. மன்னர் ஆட்சி மாறியது ஜனநாயக ஆட்சி தலைவிரித்து ஆடுகின்றது. இதனால் பயன் யாருக்கு, பயனற்றவர்கள் யார் என்பதை நீட்டிக் கொண்டே செல்ல வேண்டாம்.

சமுதாயம் என்பது ஜாதி, மதம், நிறவேற்றுமை கொண்டதும் அதற்கு உறுதுணையாக அமைந்த பொருளாதார அமைப்பும், அரசியமைப்பும் சுரண்டப்பட்டு ஏமாற்றும் தன்மையில் உள்ளது. இதற்கு கட்டாயம் ஒரு ஒருங்கிணைப்பு அவசியம் தேவை. அவை மேலும் காண்போம்.

சமுதாயத்தில் பிரச்சனைகள் சாதி வெறிப் பிரச்சனை

**ச. ஏகாம்பரம்**



## உங்கள் சிந்தனைக்கு

பிரிவினைகளால் கிராமங்களில் மட்டும் இல்லாமல் நகரங்களிலும்தாண்டவம்ஆடுகிறது. தமிழ் நாட்டில் மட்டும் இல்லாமல் இந்தியா பூராவிலும் இப்பிரச்சனைகள் உள்ளன. ஏழை என்ற காரணத்தாலும், அடிமைகள் என்பதாலும் பெண்களை கற்பழிக்கும் சம்பவங்களும் நடக்கின்ற ஆந்திர பிரதேசத்தில் ஒரு அரிஜன சட்டமன்ற உறுப்பினரைகோயிலில் பிரவேசிக்கதடைவிதித்தஜாதி இந்துக்கள் உள்ள திருநாடு இந்த நாடு. இதற்கு காவல் துறையும், நீதிமன்றங்களும், ஆளுங்கட்சிகளின் அமைப்புகளும் என்ன செய்தன. ஆளுங்கட்சியிலுள்ள சட்டமன்ற உறுப்பினருக்கே இந்த கதி என்றால் சாதாரண குடிமகனுக்கு என்ன நிலை இருக்கும் என்பது வாசகர்கள் சிந்திக்க வேண்டும்.

இன்னும் அரிஜன பெண்கள் என்றால் கிள்ளுக் கீரை தான். தமிழ் நாட்டில் அரக்கோணம் வட்டத்தில் ஒரு அரிஜன பெண்ணின் சடலத்தை புதைக்க வந்த தகராறில் அந்த கிராமமே தங்களின் உயிருக்கு பயந்து ஊரை விட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. ஏன் இதை குறிப்பாக கூறுகிறேன் என்றால் ஒரு சட்டமன்ற உறுப்பினர் உள்ள மாவட்டத்தில், அதுவும் சட்டமன்ற உறுப்பினர் அரிஜன நலத்துறை அமைச்சராக உள்ள மாவட்டத்தில்,இவ்வாறு என்றால்...

(அடுத்த இதழில் முடியும்)

# தா. தி. மாணவர் கவனத்திற்கு

## அரசினர் பாலிடெக்னிக்குகளில் முதல் ஆண்டு டிப்ளோமா கோர்சில் நீங்களும் சேரலாமே

- 1985—86 கல்வி ஆண்டில் அரசினர் பாலிடெக்னிக்குகள் (ஆண்கள் மற்றும் பெண்கள் இருவரும்) மற்றும் விசேஷ ஸ்தாபனங்களில் அளிக்கப்படுகிற மூன்றாண்டு டிப்ளோமா கோர்ஸுகளின் முதலாண்டிற்கு சேர்க்கைக்கான விண்ணப்பங்களை தொழில் நுட்பக் கல்வித்துறை கோரியுள்ளது.
- மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல், எலக்ட்ராணிக்ஸ், டெக்ஸ்டைல் டெக்னாலஜி, காஸ்ட்யூம் டிசைன் & டிரஸ் மேக்கிங், பேக்கரியில் சர்டிபிகேட் & கன்பெக்ஷனரி, சேல்ஸ்மேன்ஷிப், லெட்டர் பிரஸில் டிப்ளோமா, லெதர் டெக்னாலஜியில் டிப்ளோமா, கமர்சியல் பிராக்டிஸில் டிப்ளோமா முதலான பல வகை கோர்ஸ்கள் அளிக்கப்படுகிறது.
- இந்த கோர்ஸ்களில் சேர 10 வது அல்லது பிளஸ் 2 அல்லது அதற்கு சமமான படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- வயது வரம்பு 15-7-85 அன்று 20 வயதுநிரம்பியவர்களாக இருக்கக் கூடாது; ஷெ. வ. / ஷெ. ப. வகுப்பினருக்கு 1-7-85 அன்று 22 வயது நிரம்பியவாராக இருக்கக் கூடாது.
- விண்ணப்பப் படிவங்கள் பெற இறுதி தேதி 15-7-85. விண்ணப்பங்கள் அனுப்ப இறுதி தேதி 22-7-85.

**இது பற்றிய முழு விவரங்களை ஜூன் 24 ந் தேதி தமிழ் நாளிதழ்களில் தெரிந்துக் கொள்ளலாம்.**

## என்ன செய்கின்றன?

- தாயகம் திரும்பியோர்கள் மத்தியில் பல அமைப்புகள், சங்கங்கள் மன்றங்கள் சேவையாற்றி வருகின்றன.
- உங்கள் பகுதியில் சேவையாற்றும் அமைப்புகள் சங்கங்கள் மன்றங்கள் பற்றியும் அவற்றின் பணிகள் குறித்தும் எழுதினால் அறிமுகம் செய்து வைப்போம்

—ஆசிரியர்.

## தமிழ் பழமொழி ஆங்கில மொழியாக்கம்

# ஆய்வுத் திட்டம்

பேரன்புடையீர்,

வணக்கம். தமிழ் உலகத்தில் வழங்கும் பழமொழிகள் எல்லாவற்றையும் தொகுத்து, அறிவியல் அடிப்படையில் வகைப்படுத்தி, ஆங்கிலத்தில் பொழியாக்கம் செய்து, மிக விரிவான முறையில் ஆராயத் திட்டமிட்டுள்ளேன்.

இத்திட்டத்திற்கு மைசூரில் உள்ள இந்திய மொழிகள் நடுவண் அரசின் கல்வி-பண்பாட்டு அமைச்சகமும் துணை புரிகின்றன.

நீங்கள் அருள் கூர்ந்து உங்கள் வட்டத்திலும், மாவட்டத்திலும் தமிழ்ப் பழமொழிகளையும், நீங்கள் பல்வேறு இடங்களில் பலர் வாயிலாகக் கேட்ட பழமொழிகளையும் தொகுத்து அனுப்ப வேண்டுகின்றேன்.

நீங்கள் அனுப்பும் பழமொழிகளுக்குப் பொதுப் பொருளைத் தவிர உங்கள் மாவட்டத்திற்கே உரிய நுண் பொருளோ, சிறப்புப் பொருளோ இருக்குமாயின் அவற்றையும் குறிப்பிடுங்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்புக்களை ஆங்கில மொழி வாயிலாக உலகத்திற்கு எடுத்துரைத்துத் தமிழகத்திற்குப் பெருமை தேடித்தருவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பழமொழியும் மிக்க மகிழ்ச்சியுடனும் உளமார்ந்த நன்றியுடனும் ஏற்றுக் கொள்ளப் படும்.

★ பழமொழிகளை நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி :

**Dr. V. PERUMAL,**
M.A., B.T., D.Litt., M.R.A.S.,
"PANPAAGM", SWARNANAGAR,
ROBERTSONPET, K.G.F.- 563 122

அன்பன்
**வ. பெருமாள்**

Editor & Publisher : T. S. RAJU, Gangaiamman kovil Street, Madras - 600 094. Printer : L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B.E. Colony, 4th Street, Madras-24.
Makkal Maruvazhvoo Published in Collaboration with the ISLAND TRUST

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARJVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

# மக்கள் மறு வாழ்வு

தொடர்பு கொள்ள முகவரி :
1, தெற்கு கங்கையம்மன் கோயில் 2வது தெரு.
சென்னை — 600 094.

## நாடற்றவர்.....

(முதற்பக்கத் தொடர்ச்சி)

ஒரு புறம் சமாதானப் பேச்சுவார்த்தைகள், மறுபுறம் இந்தியாவிற்கு எதிரணியில் உள்ள நாடுகளிடம் ஆயுத பிச்சை கேட்ட வேஷதாரியான ஜெயவர்த்தனாவிடம் அனைத்து இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டுமென நிர்பந்திக்கும் சந்தர்ப்பம் வந்து விட்டது.

பேச்சுவார்த்தைகள் என்ற போாவையில் தன்னை ஸ்திரப் படுத்தக் கொள்ள அவகாசத்தை ஏற்படுத்தியுள்ளது சிங்களபேரினவாத அரசு என பலர் அஞ்சுகின்றனர். நிரந்தர அரசியல் தீர்வுக்காக முயற்சிக்கும் போதே நாடற்ற மக்களாக விளங்கும் இந்திய வம்சாவழியினர்- மலையக தோட்டத் தொழிலாளர்களின், பிரச்சனைகளையும் தீர்க்க வேண்டுமென வலியுறுத்துவது அறிவுடமையாக கருதுகிறோம்.

இலங்கையின் பொருளாதார மேம்பாட்டிற்காக உழைத்த மக்கள் அனாதரவாக, நாதியற்றவர்களாக, நாடற்றவர்களாக ஆக்கப்படுவதை தடுக்கப்படவேண்டும். மனிதஉரிமைகள் கொச்சைப் படுத்தப்படுவதை இனியும் பொறுத்திருந்து பார்க்க வேண்டியதல்ல.

ஒப்பந்தப்படி, இலங்கை அரசாங்கம் வாக்களித்த படி நாடற்றவர்களாக இருக்கும் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்பட வேண்டுமென இந்தியா வற்புறுத்த வேண்டும். இல்லையேல் நாடற்றவர்களாக இருக்கும் அனைவரையும் இந்திய அரசாங்கம் தனது பிரஜைகளாக ஏற்று அழைத்துக் கொள்ள தயாராக வேண்டும். ○

# தாயகம் திரும்ப இருப்போருக்கு நெருக்கடி!

இராமேஸ்வரம்- தலைமன்னார் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டதால், இலங்கை மலைத் தோட்டங்களிலிருந்து தாயகம் திரும்ப வேண்டியவர்கள் நெருக்கடிக்குள்ளாகி வருகிறார்கள் என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

1984 ஆண்டு அக்டோபர் மாதம் நடுப்பகுதியில் கால நிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவதுதான். மீண்டும் ஜனவரி நடுப்பகுதிக்குப் பின் ஆரம்பிக்கப்படும். ஆனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் தாயகம் திரும்ப வேண்டியவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். புறப்படுவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து அந்நிய செலாவணி சான்றிதழ்கள் அனைத்தும் பெற்றவுடன் அவர்களுக்கு தோட்டங்களில் வேலை நிறுத்தப்பட்டு விட்டது.

தாயகம் திரும்ப ஏற்கனவே அந்நிய செலாவணி சான்றிதழ் பெற்றவர்களுக்கு வேலை மறுக்க பட்டுள்ளது. கப்பல் சேவையில்லாததால் இவர்கள் இந்தியா திரும்ப முடியாதிருக்கும் அதே வேலையில், இந்தியா (தாயகம்) திருப்ப கடவுச்சீட்டு முதலான பிரயாண ஆவணங்கள் பெற்றிருப்பவர்களையும் அந்நிய செலாவணி சான்றிதழ்களுக்கு பெற வற்புறுத்தப்பட்டு வருவதோடு அவர்களுக்கும் வேலை நிறுத்தப் பட்டுள்ளது.

சிறிமாவோ— சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியா திரும்ப கடவுச்சீட்டு முதலானவைகள் பெற்று அன்னிய செலாவணி சான்றிதழ்கள் பெற்று விட்டாலே தோட்டங்களில் வேலை நிறுத்தப்பட்டு விடும். அந்த அடிப்படையில் மேற்படி தாயகம் திரும்ப இருப்போர்களுக்கு வேலை மறுக்கப் படுகிறது.

ஆனால் கப்பல் சேவை இல்லாததால் வேலையும் மறுக்கப்படுவதால் இவர்கள் நெருக்கடிக் குள்ளாகியிருக்கிறார்கள்.

வேலையில்லாமல் இவர்கள் தங்களுடைய சிறிய சேமிப்பையும் சேமலாய நிதியையும் அன்றாட வாழ்வுக்காக அங்கேயே செலவு செய்ய வேண்டிய ஒரு இக்கட்டான நிலையிலிருக்கிறார்கள்.

இவர்கள் இங்கு வந்தும் தமது வாழ்வினை அமைத்துக் கொள்ள முடியாத நிலைக்கு ஆளாவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கப்பல் சேவை ஆரம்பிக்கும் வரை அவர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென அங்குள்ள தொழிற் சங்கங்கள், மலைத் தோட்டங்களை நிர்வகித்து வரும் பெருந்தோட்ட கூட்டுத் தாபனம், ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை ஆகியவற்றின் தலைவர்களை கேட்டுக் கொண்டுள்ளன.

'இந்த நாட்டினர் உயர்வுக்காக பல ஆண்டுகளாக தம்மையே அர்ப்பணித்த தொழிலாளர்களை தாயகம் திரும்பும் இந்த கடைசி நேரத்திலும் மேலும் துன்பத்திற்குள்ளாகாமல் கப்பல் சேவை ஆரம்பித்து அவர்கள் பிரயாணம் மேற்கொள்ளும் வரை தோட்டத்தில் வேலை வழங்க தோட்ட துரைமார்களுக்கு உத்திரவிட வேண்டும் என்று தொழிலாளர் தேசீய சங்கம் அத்தலைவர்களை கோரி வருகிறது.

இதற்கிடையில். இந்தியா இலங்கை இடையே 80 ஆண்டுகளாக நடந்து வந்த இக்கப்பல் போக்குவரத்தை நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டு வருகிறது.

இந்த முடிவினை இறுதி நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அது பற்றி மறு பரிசீல்னை செய்ய வேண்டும் என்று சமீபத்தில் இராமேஸ்வரம் வந்த இந்திய, மத்திய கிராம வளர்ச்சித்துறை துணை மந்திரி சந்துலால் சந்திராார்கர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

இந்த கப்புல் சேவை இருந்தால் தான் ஒப்பந்தப்படி தாயகம் திரும்ப வேண்டியவர்கள் திரும்ப முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. ○

**உங்கள் சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள்**